**RECORD OF DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, UTHANGARAI**

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இன்று 30.10.2023 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு உரிமையியல் விசாரணை முறைச்சட்ட பிரிவின் கீழ் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case | : | O.S.No. 2/2021 | CNR.No | : | TNKI13-000111-2020 |
| Name | : | நாராயணன் | Father's Name | : | கோவிந்தசாமி |
| Witness for | : | Plaintiff | Calling | : | PW2 |
| Age | : | 39 | Village | : | கீழ்மத்தூர் |
| Taluk | : | ஊத்தங்கரை | District | : | கிருஷ்ணகிரி |

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வழக்கு 1ம் இன சொத்து யாருடையது என்றால் வெங்கடேசன் உடையது. 2ம் இன சொத்து யாருடையது என்றால் சகாதேவன் உடையது. வெங்கடேசன் என்பவர் யார் வீட்டு அருகில் வண்டி நிறுத்தி விட்டு செல்கிறார் என்றால் முருகன் வீட்டு அருகே நிறுத்திவிட்டு செல்கிறார். வெங்கடேன் வீட்டிற்கும், முருகன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் மூன்று நிலங்கள் தாண்டி செல்கிறார் அளவு என்னவென்றல் சுமார் 1,000 மீட்டருக்கு மேல் இருக்கும். நான் சொல்லும் மூன்று நிலங்கள் யாருடையது என்றால் தெரியாது. நான் சொன்ன மூன்று நிலங்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. முருகன் வீடு வாதி வெங்கடேசன் வீட்டிற்கு கிழக்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். வாதி வீட்டை சென்றடைய வேறு வழிகள் கிழக்கு திசையில் உள்ளது என்றும் அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிவுற்றது.</u>**

சாட்சியின் வாக்குமூலம் என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியென ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஊத்தங்கரை.